<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | 150/2018 | சாட்சியம் | **:** | **PW2** |
| **Name** | **:** | திரு.தியகராஜன் | | | |
| **Date** | **:** | **06.01.2025** | | | |
| **Time** | **:** | **11.25 a.m to 11.41 a.m** | | | |

<u>ம.த.சா.**2.**திரு.தியகராஜன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும். மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் அனைவரும் நிர்வாகத்திற்கு பணம் கேட்டு கடிதம் எழுதினார்கள் என்றால் தெரியாது. மனுதாரர்கள் அனைவரும் 2008 - 2010 காலகட்டத்தில் பயிற்சியாளர்களாக இருந்து பின்னர் பணி நிரந்தர உத்தரவு பெற்றோம் என்றால் ஆமாம். பணி நிரந்தரம் செய்ய கேட்டு எப்போது மனு தாக்கல் செய்யப்பட்டது எப்போது அதன் பெயரில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியும். 2010 ல் அதற்கான மனு தாக்கல் செய்யப்பட்டது. உத்தரவு 2011 ல் பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு முன்னிலைக்கு நீதிப்பேராணை தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது அதனை எதிர்த்து நாங்கள் மேல் முறையீடு தாக்கல் செய்தோம் மேல்முறையீட்டு விசாரணையின் போது மறுபரிசலனை செய்ய உத்தரவிட்டு மீண்டும் அந்த வழக்கானது தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு அது எங்களுக்கு சாதகமாக முடிவானது.

தொழிற்சாலை ஆய்வாளர் உத்தரவு பிறப்பித்த பின்னர் வேலை கேட்டு நிர்வாக திட்டம் கடிதம் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் நான் கொடுக்கவில்லை மற்ற தொழிலாளர்கள் கொடுத்தார்களா என தெரியாது. மற்ற தொழிலாளர்கள் யார் யார் நேரில் சென்று வேலை கேட்டார்கள் யார் யார் கடிதம் மூலம் வேலை கேட்டார்கள் என்ற விவரத்தை என்னுடைய சாட்சியத்தில் சொல்லவில்லை. R.சுரேஷ் என்பவர் நிர்வாகத்திடம் மீண்டும் வேலை கேட்டார். R.சுரேஷ் சாட்சி சொல்ல தயாராக உள்ளார். பயிற்சி காலம் 2010 ல் முடிவடைந்தது. பயிற்சி காலம் முடிவடைந்த பின்னர் தொழிற்சாலை ஆய்வாளரிடம் மனு கொடுத்தோம் பணி நிரந்தரம் செய்ய கேட்டு நாங்கள் தொழிற்தாவா எதுவும் எழுப்பவில்லை. நாங்கள் கடைசியாக 2010 ல் பணியில் இருந்தோம் என்றால் ஆமாம். எனக்கு திருமணம் ஆகி இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். மூத்த மகன் ஆறாம் வகுப்பு இளைய மகள் முதல் வகுப்பு படிக்கிறார். சொந்த வீட்டில் வசிக்கிறோம். என் மனைவி மருந்து கடையில் வேலை பார்க்கிறார். நான் ஆக்டிங் டிரைவர் ஆக உள்ளேன். எங்களுடைய பயிற்சி காலமானது 2010 இல் முடிவடைந்து தொழிலாளர் ஆய்வாளரிடம் உத்தரவு பெற்று இருந்தாலும் பயிற்சியை முடித்தது தவறு என அறிவிக்க கேட்டு தொழிற்தாவா எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் மனு நிலைக்கததது அல்ல என்றால் சரியல்ல. நிரந்தர படுத்துதல் உத்தரவு பெற்ற பின்னர் நாங்கள் யாரும் வேலை கேட்டு நிர்வாகத்தை அணுகாமல் ஆறு ஆண்டுகள் கழித்து தாமதமாக தாக்கல் செய்திருக்கும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மனுவில் சம்பந்தப்பட்ட 19 தொழிலாளர்களில் சிலர் தமிழ்நாட்டில் வசிக்காமல் அவர்களின் சொந்த ஊருக்கே போய்விட்டார்கள் என்றால் இல்லை. அவர்களை வர சொன்னால் வர

தயாராக தான் உள்ளார்கள். தொழிலாளர்களில் ஆறு பேர் நீண்ட நாட்களாக வேறு இடத்தில் வேலை செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலாளர்களும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளார்கள்.

S SUJATHA

Presiding Officer,
Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.01.18 18:11:31 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.01.2025